ஆண்டு சந்தா ரூ. 60/-

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 7

இதழ் : 3

பிப்ரவரி – 2011






## தேவனுடைய


## வாக்குத்தத்தங்களெல்லாம்

## இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.

2 கொரி. 1 : 20

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## உங்கள் சகோதரனிடமிருந்து....



**ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின்
இனிய நமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!**

இந்த பிப்ரவரி மாத இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஜனவரி மாதம் முழுவதிலும் தேவன் நம்மை நடத்திவந்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன். கடந்த 03.01.2011 அன்று தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்களுக்கும், 07.01.2011 அன்று குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கும், 08.01.2011 குஜராத் சுதேச ஊழியர்களுக்கும், 10.01.2011 அன்று மத்தியப்பிரதேசம் சுதேச ஊழியர்களுக்கும், 12.01.2011 அன்று இராஜஸ்தான் சுதேச ஊழியர்களுக்கும் "சிறப்பு புத்தாண்டு வாக்குத்தத்த கூட்டம்" மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அனைத்து ஊழியர்களும் குடும்பமாக பங்கு பெற்று, புதிய அபிஷேகத்தையும், புதிய தரிசனங்களையும் பெற்றனர். இந்த ஆண்டு முழுவதிலும் தேவன் ஊழியர்களை வல்லமையாக பயன்படுத்த பாரத்துடன் ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

இந்த ஆண்டில் தேவன் தந்த திட்டத்தின்படி 10 லட்சம் ஆத்துமாக்களை அறுவடை செய்ய, 24 ஊழியர்களை ஏற்படுத்தி 12 குழுக்களாக பிரித்து வாரந்தோறும் 12 சுவிஷேச கூட்டங்களை நடத்த ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம். அதற்காக 24 ஊழியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக மறவாமல் ஜெபியுங்கள்.

ஊழியங்கள் வளர்ந்து பெருகுகின்ற அதே நேரத்தில் ஊழியத்தின் தேவைகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மாதந்தோறும், ரூ. 500/– கொடுத்து ஊழியத்தை ஜெபித்துத் தாங்கக்கூடிய 1000 பேர் தேவைப்படுகிறார்கள். மேலும் ஒரு முறை ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் ஆயுள் கால அங்கத்தினராக இணையக்கூடிய 2000 பேர் தேவைப்படுகிறார்கள். நீங்களும் இந்த மாபெரும் தரிசன பணியினை நிறைவேற்ற ஊழியங்களைத் தாங்க முன் வரலாம். மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அறிமுகப்படுத்தி ஜெபித்துத் தாங்க அன்பாய்க் கேட்கிறேன்.

தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், பணித்தள அலுவலக ஊழியர்கள், நமது சுதேச ஊழியர்கள், Compassion Project ஊழியர்கள் ஆகியோருக்காக தொடர்ந்து மறவாமல் ஜெபியுங்கள்!

**"நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்".**

ஏசா. 43:4

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*

(Rt. Rev. Dr. V. Devadass)

மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468

# "வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிப்போம்"

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே". – 2 கொரி. 1:20**

நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்காக பல வாக்குத்தத்தங்களை எழுதி தந்துள்ளார். அவைகள் தேவனுடைய தூதர்கள் மற்றும் தேவ ஜனங்கள் வாழ்வில் நிறைவேற்றப்பட்டு வருகிறது மட்டுமல்லாமல் இன்றைக்கும் அவைகள் ஜீவனுள்ளதாக இருக்கிறது. ஏனெனில் வாக்குத்தத்தம் பண்ணினவர் வாக்கு மாறாதர். எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் மனம் மாற தேவன் மாந்தர் அல்ல. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். ஏனெனில் வாக்குத்தத்தம் பண்ணினவர் அதை நிறைவேற்ற வல்லவர். வேதத்தில் ஆதாம் முதற்கொண்டு அநேக தேவ பக்தர்களின் வாழ்வில் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியுள்ளார். தேவ ஜனங்கள் தேவணண்டை வரும் போதெல்லாம் வாக்குத்தத்தங்களைத் தந்து ஆற்றி தேற்றி பலப்படுத்துவார். அதுமட்டுமல்ல நம்முடைய தேவன் வாக்குத்தத்தங்கள் மூலமாக நம்மை உற்சாகப்படுத்துகிறார். சோர்ந்து போகும் போதெல்லாம் தேவன் தந்த வாக்கத்தத்தங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. மேலும் நம் தேவன் வாக்குத்தத்தங்கள் மூலமாக நம்மை ஆசீர்வதிக்க சித்தம் கொள்கிறார். நம்மை ஆசீர்வதிப்பதால் அவர் சந்தோஷப்படுகிறார். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே எனக்குப் பிரியம் என்று திருவுளம் பற்றுகிறார். மேலும் வாக்குத்தத்தங்கள் தேவன் தந்து நம்மை ஆசீர்வதிப்பது மட்டுமல்ல, அதைப் பெற்றுக் கொள்ள அவர் கொடுத்த, கட்டளைகளையும், நியமங்களையும் நாம் ஏற்றுக் கொண்டு அதில் நடப்பதற்கு வழி நடத்துகிறார். ஆகவே வேதத்தில் காணும் வாக்குத்தத்தங்கள் யாவும் விலையேறப்பெற்றவைகள், மாறாதவைகள், ஆம் என்றும், ஆமென் என்றும் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அல்லேலூயா!

பழைய ஏற்பாட்டில் அநேக தேவதாசர்களும், தேவ ஜனங்களும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியாமற் போய்விட்டார்கள் என்பதைக் காண்கிறோம். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்கிற நமக்கு விஷேசித்த கிருபையையும், வாக்குத்தத்தங்களையும் சுதந்தரிக்கும்டியாகவும் தேவன் தந்துள்ளார். எபிரேயர் 11ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். நற்சாட்சிப் பெற்ற ஒரு மிகப்பெரிய பரிசுத்தவான்களின் பட்டியலை தேவன் தந்து, 39ம் வசனத்தில் இவர்கள் எல்லோரும் நற்சாட்சிபெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அதே வேளையில் 40 வசனத்தில் விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.

அந்த விஷேசித்த நம்மையானதொன்று இயேசு கிறிஸ்து. அந்த இயேசு கிறிஸ்துவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்வோம். மட்டுமன்றி தேவன் நமக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாக வாக்குத்தத்தங்களை ஆம் என்றும் ஆமென் என்றும் நிறைவேற்ற சித்தம் கொண்டுள்ளார். கலாத்தியர் 3ம் அதிகாரத்தில் ஆபிரகாமுக்கு உண்டான வாக்குத்தத்த ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் நமக்கு கிடைத்துள்ளது என்று வாசிக்கிறோம். ஆனாலும் அநேகர் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ளாமல் போவதற்கு என்ன காரணம் என்ன என்பதை வேதத்தின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

**1. அவிசுவாசம்**

அவிசுவாசம் வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள தடையாயிக்கிறது. வேதத்தில் தேவன் தந்த மிகப்பெரிய வாக்குத்தத்தம் இஸ்ரவேலருக்கு வாக்குத்தத்தம் பண்ணி கானான் தேசமாகும். ஆபிரகாம் தேவன் 4ம் தலைமுறைக்கு என்று வாக்குப்பண்ணி இஸ்ரவேல் ஜனங்களை மோசே மூலமாக எகிப்தின் அடிமைத்தனத்தி–ருந்து விடுவித்து நடத்திச் சென்றார். ஆனால் நடந்தது என்ன? சுமார் 6 லட்சத்திற்கும் அதிகமான புருஷர்கள் குடும்பங்களில் 2பேர் காலேப், யோசுவா மட்டுமே சுதந்தரித்தார்கள். மீதியான அனைவரின் பிரேதங்களும் வனாந்தரத்தில் விழுந்தது என்று காண்கிறோம். அதைக்குறித்து மோசே உபா. 1 :30–33 வரை உள்ள வசனங்களில் கூறுகிறார்.

- அடிமைத்தன வீடாகிய எகிப்தி–ருந்து மீட்டார்.
- பார்வோன் சேனைகளின் கைக்கு விலக்கிக் காத்தார்.
- செங்கடலைப் பிளந்து தேவ ஜனங்களை நடத்தினார்.
- கர்த்தர் ஜனங்களுக்காக யுத்தம் செய்தார்
- ஒரு மனிதன் தன் பிள்ளைகளைச் சுமந்து செல்வது போல சுமந்து சென்றார்.
- வழி காட்ட இரவில் அக்கினி, பக–ல் மேக ஸ்தம்பமாக இருந்தார்.

புசிப்பதற்கு வனாந்திரத்தில் மன்னாவைக் கட்டளையிட்டு, எல்லா நன்மைகளையும் குறைவின்றி தந்து நடத்தினார்.

ஆனாலும் இந்த காரியத்தில் நீங்கள் அவரை விசுவாசியாமற்போனீர்கள். ஆகையால் 40 நாளில் அடைய வேண்டிய வாக்குத்தத்த தேசத்தை 40 வருடங்கள் அலைந்து திரிந்தது மட்டுமல்லாமல், விசுவாச புருஷர்களாகிய யோசுவா, காலேப் தவிர வேறு யாராலும் அங்கு செல்ல முடியவில்லை.

எனக்கு அன்பான தேவ ஜனமே, தேவனிடத்தி–ருந்து அவர் வல்லமை, கிரியைகளை நாம் எத்தனையோ கண்டிருந்தாலும் வாக்குத்தத்தங்களைக் குறித்து அதிக பாரம் இருந்தால் நாம் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆபிரகாமின் வாழ்க்கை நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் தன் சரீரம் செத்துப் போய்விட்டது, தன் மனைவி சாராள் கர்ப்பம் செத்துப் போய்விட்டது. ஆனால் ரோமர் 4ம் அதிகாரத்தில் ஆபிரகாம் அவைகளை எண்ணாதிருந்தான் என்று எழுதப்பட்டுள்ளது. நம் வாழ்க்கைப் பாதையில் நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் நம்மை அவிசுவாசத்திற்கு நடத்தும் போது, நாம் விசுவாசத்துடன் அவைகளை எண்ணாம–ருந்து தேவன் சர்வ வல்லமை உள்ளவர் என்று விசுவாசிப்போம். நம் பிரச்சனைகள், வேதனைகள், நோய்கள், முதலானவைகளை நீக்க தேவன் சர்வ வல்லமை உள்ளவர் என்று விசுவாசிப்போம். தேவனே என் அவிசுவாசம் நீங்க எனக்கு உதவி செய்யும் என கதறுவோம். ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணும் என ஜெபிப்போம். அவிசுவாசம் நீங்கி விசுவாசம் நம் வாழ்வில் மலரட்டும். வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோம்.

## 2. கீழ்ப்படியாமை

கீழ்ப்படியாமை வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள தடையாக உள்ளது. தேவன் வாக்குத்தம் பண்ணும் போது எத்தனை சந்தோஷம் தேவனுடைய ஊழியர்கள் மூலமாகவும், சபையில் ஆராதனை வேளைகளிலும் மற்றும் நேரடியாக நமக்கும் தேவன் எத்தனை வாக்குத்தத்தங்களை தருகிறார். புத்தாண்டு வாக்குத்தத்தம், பிறந்த நாள் வாக்குத்தத்தம், திருமணநாள் வாக்குத்தத்தம் என வெவ்வேறு சூழ்நிலைகளில் சோர்ந்து போகும் போதெல்லாம் தேவன் வாக்குத்தத்தம் தருகிறார். அவைகளை எழுதி ஒட்டி வைக்கிறோம். காலண்டரில் கண்டு மகிழ்கிறோம். ஆனால் அநேக நேரங்களில் அதனை பெற்றுக் கொள்ள முடியாமற் போவதற்கு நம் கீழ்படியாமையே காரணமாக அமைகிறது.

ஆதியாகமம் 19–ம் அதிகாரத்தில் லோத்துவை குறித்து வாசித்துப் பாருங்கள்.லோத்துவின் குடும்பம் சர்வ வல்லமையுள்ள தேவன் ஆபிரகாமை தெரிந்து கொள்ளும் போது லோத்துவும் உடன் இருந்தான். தேவனை அறிந்தான். ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவனாக தெரிந்துகொள்ளப்பட்டான். தேவனால் ஆசீர்வதிக்கவும் பட்டான். தேவன் சோதோமை அழிக்க நினைத்த போது ஆபிரகாமின் நிமித்தமான லோத்திற்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. தேவதூதர்கள் அனுப்பப்பட்டார்கள். கர்த்தருடைய தோட்டத்தைப் போல காணப்பட்ட சோதோம் தேவகோபாக்கினையை அடைந்த போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாம் நிமித்தமாக அழிந்து போகும் சோதோமிற்கு அல்ல ஆசீர்வாதமான கானான் தேசத்திற்கு அழைக்கப்பட்ட குடும்பம். தேவன் கோபாக்கினையின் அழிவினின்று மீட்கும்படியாக லோத்தை அழைத்தார். "பின்னிட்டுப் போகாதே" என்று கட்டளை கொடுத்தார். ஆனால் லோத்தின் மனைவிக்கு என்ன நேர்ந்தது பாருங்கள். பின்னிட்டு பார்த்து உப்புத்தூணாக மாறினாள். வாக்குத்தத்தம்

பண்ணப்பட்ட ஆபிரகாமின் குடும்பத்தில் இருந்தாலும், தேவகிருபையை எவ்வளவோ பெற்றாலும் உப்புத்தூணாக மாறிவிட்டாள். அதற்கு காரணம் என்ன? தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமையாகும். தேவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு பழையவைகளை பாராதே என்றும் முன்னோக்கி ஓடு என்றும் கூறினார். லோத்தின் மனைவி ஏன் கீழ்ப்படியவில்லை. சோதோம் இச்சைகள், உலகம், மாமிச காரியங்கள், கீழ்ப்படியும் மனதை திருப்பிவிட்டது. தேவன் சொன்னபடி விட்டுவிட வேண்டியவைகளை விட்டு விடாமல் செய்ய வேண்டிய காரியமான முன்னோக்கி ஓடுதலை விட்டுவிட்டாள்.

எனக்கன்பானவர்களே, தேவன் தரும் சிறு காரியங்களோ, பெரிய காரியங்களோ அதற்கு கீழ்ப்படிவோம். ஆதாம், ஏவாள் பழத்தை தொடாதே, புசிக்காதே என்று தேவன் கூறியது சிறிய காரியம் என்று நினைத்து கீழ்ப்படியாமற் போனார்கள். நம் வாழ்விலும், ஊழியத்திலும் தேவன் எவைகளை விட்டுவிட சொல்லுகிறாரோ அவைகளை விட்டுவிடுவோம். எதை செய்ய சொல்லுகிறாரோ அதை செய்வோம். சின்ன காரியம் தான் என்று நினைத்து கீழ்ப்படியாமற் போக வேண்டாம். தேவ ஆசீர்வாதத்தை இழக்க வேண்டாம்.

1991–ம் ஆண்டு தேவன் ஷாலோம் ஊழியத்தை ஆரம்பிக்கும்படியாக அழைப்பும், தரிசனமும் தந்தார். 20வருடங்களில் திருமண்டலமாக பீல் மக்கள் மத்தியில் உருவாக்க கிருபை தந்தார். தேவன் எங்களிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் என்ன தெரியுமா? கீழ்ப்படிதல். தேவன் தரும் ஒவ்வொரு ஆலோசனைக்கும் நாங்கள் குடும்பமாகவும், பீல் சுதேச ஊழியர்கள் அனைவரும் கீழ்ப்படிகிறபடியால் தான் இவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டோம். “கீழ்ப்படியாமை” எனும் சொல்லை வாழ்க்கையில் இருந்து , ஊழியப்பாதையில் இருந்து , எடுத்து விடுவோம். “கீழ்ப்படிதல்” என்ற படியில் ஏறுவோம். வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்வோம். தேவன் தாமே நமக்கு கிருபை அருள்வாராக. ஆமென்.

## நமது ஷாலோம் கிளை அலுவலகங்கள்

| மார்த்தாண்டம் | ***Bro. G. Selvadurai***<br>Kalikal House, Near A.G.Church<br>Gnaramvilai, Pacode.P.O<br>K.K Dist, Tamil Nadu 629168<br>Cell : 94876-89869 |
|---|---|

சென்னை

| ***Bro. B. Ebenezer Daniel*** | ***Bro. D. Diaz Bose*** |
|---|---|
| New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094<br>Cell : 934 44-75468 | No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024<br>Cell : 90427-80315 |



# வேதத்தைத் தியானிப்பதால் வரும் நன்மைகள்

- வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். அவ்வாறு செய்யும் போது கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறோம். (யோவான் 5:39)
- நித்திய ஜீவனை அடைய வேத ஆராய்ச்சி உதவும் (யோவான் 5:39)
- வேதத்தை நாம் தியானித்தால் நமது வாழ்க்கை சிறப்பானதாகவும், செழிப்பானதாகவும் அமையும்; நாம் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங். 1 : 1–3)
- கர்த்தரால் வரும் ஆசீர்வாதங்களை (பாக்கியங்களை) அடைவோம் (வெளி. 1:3)
- தேவனுடைய வார்த்தைகள் நமது உள்ளத்தில் நிலைத்திருந்தால் நமது விண்ணப்பங்கள் கேட்கப்படும் (யோவான் 15:7)
- தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் மறைத்து வைக்கும் போது நாம் பாவம் செய்யாதவாறு காக்கப்படுவோம் (சங். 199:11). நியாயத் தீர்ப்பில் தப்பித்துக் கொள்ள வேத தியானம் ஏவும் (யோவான் 12:48).
- தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கிறவன் தன்னிலும் முதியோரை விடவும் தன் ஆசிரியர்களைவிடவும் ஞானியாக மாறுவான் (சங். 119:98–100).
- தேவனுடைய வார்த்தை நம்மைச் சுத்திகரிக்கும் என்பதை யோவான் 15:3, எபேசியர் 5:26–ல் காண்கிறோம். அதைத் தியானிப்பவன் பரிசுத்தம் அடைவான் (யோவான் 17:17). அவனுக்கு வேதத்தியானத்தின் மூலம் எச்சரிப்புகள் கிடைக்கும் (1கொரி 10:11)
- தேவனுடைய வார்த்தை பாவத்தை உணர்த்தும், திருத்தும், சுத்திகரிக்கும், நிலை நிறுத்தும், வழி நடத்தும், சீர் பொருந்தப் பண்ணும், போதித்துத் தகுதிப்படுத்தும் (2தீமோ. 3:16,17) இவைகளை அனுபவிக்க வேதத்தியானம் உதவும்.
- பாவத்தையும், அந்தகார சக்திகளையும் எதிர்க்கும் பட்டயமாகப் பயன்படுகிறது வேதம் (எபே. 6:17). வேதத்தைத் தியானிப்பவர்கள் பட்டயத்தைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுகிறார்கள்.
- வேதத்தைத் தியானிப்பதால் அதிலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்கிறோம். இவைகள் ஏற்ற சமயத்திலே உற்சாகமும், ஆறுதலும் அடைவதற்கேற்ற நம்பிக்கையூட்டும் போதனைகளாகும் (ரோமர் 15:4)
- எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுடையவர்களாக ஆவதற்கு வேத அறிவு தேவை (2தீமோ. 3:16,17, அப். 17:11).
- ஆவிக்குரிய ஆகாரம் பெறவும், வளர்ச்சி அடையவும் வேத ஆராய்ச்சி தேவை (1 பேதுரு 2:1, 2,3, எபி. 5:12–14)
- சரியான உபதேசத்தைத் தெரிந்து கொள்ளவும் கள்ளப் போதகத்தைத் தெரிந்து கொண்டு ஒதுக்கவும் வேத ஆராய்ச்சி மிகவும் தேவை. (2தீமோ. 2:15, 2 பேதுரு 1:19–2:1)

இன்னும் பல நன்மைகள் உண்டு. வேதத்தின் மகத்துவங்களை அந்நிய காரியமாக எண்ணாமல் உற்சாகமாகத் தியானிக்க நம்மை இன்றே ஒப்புக் கொடுப்போம். (ஓசியா 8:12)

– நன்றி : வேதத்தைத் தியானிப்பது எப்படி?

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,



***2011 பிப்ரவரி 23ம் தேதி*** அன்று என்னுடைய வாழ்வில் 51 ஆண்டுகளை நிறைவு செய்ய தேவன் கிருபை செய்கிறார். அவருக்கே துதி, கனம், மகிமை செலுத்துகிறேன்.

எனக்கு ஜீவன் தந்து, இரட்சித்து அபிஷேகித்து ஊழிய அழைப்பைத் தந்து நல்ல இல்லற வாழ்வினைத் தந்து ஒரு ஜாதி (பீஸ்) மக்களுக்கு ஆசீர்வாதமாக உருவாக்கிய திரியேக தேவனுக்கு நன்றி செலுத்தி எனது வாழ்வில் இனிவரும் காலம் முழுவதும் அவருக்காக பணிபுரிய என்னை அர்ப்பணிக்கின்றேன்.

***Rt. Rev. Dr. V.*** **தேவதாஸ்**



**“நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்தி–ருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்”** GúW. 1:5

## ***உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...***

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தாலோ, மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் உங்களது முகவரியில் திருத்தங்கள், மாற்றங்கள் அல்லது புது முகவரியை உடனடியாக தெரிவிக்க அன்பாய் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## *மிஷனெரி முன்னோடிகள்*



**டேவிட் ஹில்,** அவர்கள் லண்டன் நகரிலுள்ள வசதியான மெதடிஸ்ட் பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தமது இளம் வயதிலேயே ஆண்டவரை ஏற்றுக்கொண்டார். தான் ஒரு மிஷனெரிப் பணி செய்ய வேண்டும் என்பதே இவருடைய விருப்பமாக இருந்தபடியால், ரிச்மெண்ட்–ல் உள்ள வெஸ்–யின் பயிற்சி நிலையம் மூலம் பயிற்சி பெற்று, சுதேச ஊழியராய் பணி செய்தார். 1804–ல் குருத்துவ அபிஷேகம் பெற்று, சீனாவிற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். தன்னுடைய சொத்தில் அதிகமான பங்கை மிஷனெரி ஸ்தாபனங்களுக்கு அனுப்பி உதவி செய்தார்.

டேவிட் ஹில்லையும், மெதடிஸ்ட் மிஷனெரியான ஸ்கார்பரோவையும் ஒரு ஆங்கிலேய வியாபாரக் கப்பல் சீன தேசத்தில் கால் மிதிக்கும்படியாய் கொண்டு சென்றது. சீனாவில் உள்ள லண்டன் மிஷனெரிப்பணி செயலகத்தில், திரு. முயிர்ஹெட் இருவரையும் வரவேற்று, உபசரித்து முறையான கடிதங்களை அவர்களிடம் கொடுத்தார். சீனமொழியை தாங்களாகவே கற்க முயன்றனர். ஆனால் அது அவர்களின் புத்திக்கு எட்டாததாயிருந்தது. இரண் **டேவிட் ஹில்** ந்தளமான ஹேங்கேவிற்கு அனுப்பப்பட்டார்கள். இந்த இரு வா–பர்களின் உள்ளங்களில் நற்செய்தியை சீனர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொழுந்து விட்டு எரிந்தது. ஆங்கிலேயர்களுக்கு தடைசெய்த பட்டணம் வியூசங். லோவ் என்ற சீன ஆசிரியர் மூலம் மொழியைக் கற்க ஆரம்பித்தனர். டாக்டர் ஸ்மித் என்பவரின் மருத்துவமனையிலே பணி செய்தார்கள். ஆனால் வியூசங் தான் அவர்கள் மனதில் இருந்தது. இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட விரோதம், கசப்பினால் அந்நியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இப்பட்டணம் தடைசெய்யப்பட்டது. 1805ல் திபெத்தி–ருந்து உருகிய பனி, யாங்ட்சே ஆற்றில் கலந்து பெருவெள்ளமாக உருவெடுத்தது. அதின் பாதிப்பினால் ஹேங்கேபாவில் மலேரியா பரவியது. ஹில்லையும் அது விட்டுவைக்கவில்லை. படகு மூலம் ஜப்பான் கொண்டு சென்று ஹில் குணமடைந்தார். அனால் மீண்டும் தேவனுக்காக, தடைசெய்யப்பட்ட பட்டணமாகிய வியூசங்–கை ஆதாயமாக்க வேண்டுமென்று நினைத்தார்.

டேவிட் ஹில்–ன் தைரியம் அவருக்கு வெற்றியைத் தந்தது. வியூசங்கில், எரிகிற நட்சத்திரம் என்கிற கோயிலுக்கு எதிர்புறத்தில் ஒரு வாடகை வீட்டில் குடியேறினார். அந்த வீட்டையே தேவனை ஆராதிக்கும் ஸ்தலமாகவும் பயன்படுத்தினார். உடனடியாக தன் வேலைகளையும் துவக்கினார். வரலாற்றிலேயே முதன்முறையாக இயேசுவின் சரித்திரம், எரிகிற

நட்சத்திரம் கோவி–ல் உள்ள தீய ஆவிகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஹில்லுடைய கல்லூரி நண்பரான நேப்பியர் அவருக்க உதவி செய்யும் படியாய் வந்தார். இருவரும்சேர்ந்து சுவிஷேசம் அறிவிக்கத் தொடங்கினர். 1869ம் ஆண்டு ஜுன் மாதம் யாங்ட்சேவில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். சொத்துக்கள் அழிந்தன. நேப்பியர் மிஷனெரி லண்டன் சென்றார். ஆனால் ஹில் தன்னுடைய சுயநலத்தைக் கருதாமல், திரண்டு வந்த ஜனங்களுக்குச் சேவை செய்தார். அடுத்த வருடத்திலே டென்ப்பீன் படுகொலையினால் பயங்கர கலவரம் நடந்தது. ஹில் பயந்த போதும் ஆண்டவரிடம் ஊக்கம் பெற்றார். 1876–ல் பஞ்சத்தினால் தேசம் அவதிப்பட்டதுமின்றி, குளிர்காலமானதால் பனியும் சூழ்ந்து கொண்டது. டேவிட் ஹில்லும், சீன உள்நாட்டு மிஷனைச் சார்ந்த டர்னரும் மீட்புப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பஞ்சத்தில் தவிக்கும் மக்களுக்கு உதவி செய்தனர். அதன் மூலம் விக்கிரகங்கள் மீதான நம்பிக்கை அற்றுப்போயிற்று. தன் எஜமானின் வேலை செய்ய இதுவே சரியான நேரம் என்று கருதி மக்களுக்கு சேவை செய்தார்.

சீன மதப் பாரம்பரியத்தின்படி, பரலோகத்தின் வழி என்ற தலைப்பின் கட்டுரைப் போட்டியை அறிவித்து, உயர்ந்த பரிசுகள் வழங்கப்படும் என்று அறிக்கையிட்டார். ஹிசி என்பவர் கட்டுரை போட்டியில் வென்றார். ஹில்லையே நோக்கிக் கொண்டிருந்த ஹிசி இதுவரை நித்திய வாழ்க்கையை வீணாய் தேடியதை உணர்ந்தார். அந்த தனிமையான அறையில் தன் வாழ்வை ஒப்புக் கொடுத்தார். கிறிஸ்துவின் பணி செய்ய கிறிஸ்து அழைத்தார். அதற்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார். இதைக்கண்ட டேவிட் ஹில், தான் வெகு தூரத்தி–ருந்து வந்தது இந்த ஒரு மனிதனை மாற்றத்தான் என்றும், தான் வந்தது வீணாகவில்லை என்றும் உணர்ந்தார். போதகர் ஹிசி ஷான்சியின் ஜனங்களை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்தும்படி ஒரு மேய்ப்பனாக ஷான்சியிலேயே தங்கினார். மாணவ, மாணவியரின் பள்ளிகள் கட்டுதல், மருத்துவமனைகள் கட்டுதல், பார்வையற்றோர் பள்ளி ஊழியம், அச்சு மற்றும் கிறிஸ்தவ செய்தித்தாள் ஆகியவற்றை நிறுவும்படியான தரிசனத்துடன் டேவிட் ஹில் எப்பொழுதும் நிறைந்திருந்தார். அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் சென்று திரும்பும்போது ஹில் தன்னோடு 200 ஸ்வீடிஷ் மிஷனெரிகளை அழைத்து வந்தார்.

டேவிட்ஹில் அழிந்து போகிற ஆத்துமாக்களை மட்டுமல்ல, கைவிடப்பட்டுத் தெருக்களில் பிணங்களாக மடிந்து கொண்டிருந்த சரீரங்களையும் மீட்டு வந்தார். நாட்கள் செல்லச் செல்ல சரீரம் தளர்ந்து சோர்வானார். ஆனால் எப்பொழுதுமே நீல நிற உடை அணிந்திருக்க அந்த உயரமான சிரித்த முகம், சீனர்களுக்குக் கிறிஸ்தவ நம்பிக்கையைத் தந்தது. இறுதியிலே அவர் 19 ஏப்ரல் 1896ம் ஆண்டு டைபாய்டு காய்ச்ச–னால் தேவராஜ்யம் சேர்ந்தார். அவர் ஆரம்பித்த பார்வையற்றோர் பள்ளி மாணவர்கள் அவருக்கு சவப்பெட்டி செய்தார்கள். அவர் ஆரம்பித்த பள்ளி, கல்லூரி மாணவர்கள் மரியாதை செலுத்தினார்கள். துக்கத்தால் நிறைந்த ஆயிரக்கணக்கான சீனர்களும், ஆங்கிலேயர்களும் அமைதியாக அணிவகுத்து நின்று திரு. டேவிட் ஹில் அவர்களுக்கு விடை கொடுத்தார்கள். என்றும் அணையாத தீயை சீனாவில் தேவன் பற்றவைத்தார்.

# புது வருட வாக்குத்தத்த கூடுகைகள்


கேக்குகள் வெட்டி புத்தாண்டு வரவேற்கப்படுகிறது


காணிக்கைக்கான ஜெபம்

குஜராத்தில் நடைபெற்ற கூடுகை (08.01.2011)


ஆராதனை வேளை


கூடியிருந்த ஊழியர்கள்

மத்தியப்பிரதேசத்தல் நடைபெற்ற கூடுகை (10.01.2011)


ஊழியங்களைக் குறித்து
Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்


கூடியிருந்த ஊழியர் மற்றும் ஊழியர் மனைவிமார்







இராஜஸ்தானில் நடைபெற்ற கூடுகை (12.01.2011)

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ரோஷினி புரியா** |
| தந்தையின் பெயர் | : | பூர்சன் புரியா |
| பிறந்த நாள் | : | 22.08.1999 |
| படிக்கும் வகுப்பு | : | 5th Std., |
| சொந்த ஊர் | : | அந்தர்வேலியா |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியப்பிரதேசம் |

## மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

ரோஷினி புரியாவின் தாத்தா மிகவும் அசுத்த ஆவியின் பிடியில் சிக்குண்டு அநேக வியாதியினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மருந்துகள் செலவழித்தும் மந்திரங்கள் பார்த்தும் ஒரு பலனுமில்லை. 3 வருடங்களாக வீட்டை விட்டு வெளியேறி கோயில்களிலும் மசூதிகளிலும் தங்கி பூஜைகள் செய்தும் அநேக பலிகளை கொடுத்தும் ஒரு பலனுமில்லை. இறுதியிலே ருன்கேடா கிராமத்தில் ஊழியம் செய்த ஷாலோம் ஊழியரைக் குறித்து கேள்விப்பட்டு சபைக்கு 2 வாரங்கள் சென்று ஜெபித்தபோது, தேவன் அசுத்த ஆவியின் கட்டுகளிருந்து பூரண விடுதலையும், வியாதிகளிருந்து சுகத்தையும் கொடுத்தார். இதன் மூலமாக முழுக் குடும்பமும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டது. இவளுடைய தந்தை சகோ. பூர்சன் புரியா தேவனுடைய அழைப்பைப் பெற்று ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இந்த அந்தர்வேலியா கிராம சபை மத்தியபிரதேச ஊழியத்தில் முன்னோடி சபையாக விளங்கி வருகிறது. இதுவரை 400க்கும் அதிகமான விசுவாசிகள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–** இவள் நன்றாக படிப்பாள், பாடுவாள். பெற்றோருக்கும் கீழ்ப்படியும் சுபாவம் உடையவள். படித்து செவிலியராக (Nurse) வேண்டும் வாஞ்சை உண்டு.

**ஜெபியுங்கள்:–** இவள் நன்றாக படிக்க, தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், இவளுடைய பெற்றோர் செய்யும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள்<br>**12.02.2011, சனிக்கிழமை** | நேரம்<br>**மாலை 5.00 மணி**<br>**முதல் 7.00 மணி வரை** |
|---|---|

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**

**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

## தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு ஊழியர்கள் தேவை

***தேவ கிருபையினால் கடந்த 19 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.***

1. Accounts Department –ல் பணிபுரிய 2 பேர்

2. Thanks Letter Department –ல் பணிபுரிய. (Tamil & English Typing தெரிந்த)

3. வெளி வேலைகளைக் கவனிப்பதற்கு. (Bank Work & Other)

இந்தப் பணிகளைச் செய்ய ஊழியர்கள் (சகோரர்கள், சகோதரிகள்) நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள். ஆகவே ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஊழிய வாஞ்சை உள்ளவர்கள் இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் தூத்துக்குடி அலுவலக மேலாளர் சகோ. சாம் குணசீலன் அவர்களோடு தொடர்பு கொள்ளலாம்.

**செல் போன் : 9345675468**

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்றுவருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *பிப்ரவரி மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 04.02.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 05.02.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 19.02.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 23.02.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது, தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

***"உன்னோடு போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லலாமல் இல்பொருளாவார்கள்."*** **ஏசாயா 41:12**

## ஷாலோம் சிறுவர்களுக்கான

# கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சிகள்

2010–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 18–ம் தேதி குஜராத், மத்தியபிரதேசத்தில் உள்ள நம்முடைய ஷாலோம் ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் ஷாலோம் Hostel (I.P.M, Jesawada, Gadwada) பிள்ளைகளுக்கும் 17–ம் தேதி இராஜஸ்தானில் உள்ள ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் Bijalpur, Goika Hostel –ல் உள்ள பிள்ளைகளுக்கும், 11–ம்தேதி மத்தியபிரதேசம் Anthervelia-ல் உள்ள Compassion பிள்ளைகளுக்கும், 12–ம் தேதி குஜராத்தில் Hirola–ல் உள்ள Compassion பிள்ளைகளுக்கும், 19–ம் தேதி Gujarat-ல் Jeri- ல் உள்ள பிள்ளைகளுக்கும் விசேஷித்த கிறிஸ்மஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 2000–க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர். மூன்று மாநிலத்திலும் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் பிள்ளைகளின் பெற்றோர்களும், விசுவாசிகளும் பங்கு பெற்று மகிழ்ந்தனர்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் **Sis. Vahitha Devadass** அவர்கள் தலைமையில் சகோ. டேனியல் ஆஸ்வால்டு அவர்களும் இணைந்து சிறப்பாக நடத்தித் தந்தார்கள். **Rt. Rev.Dr. V. Devadass** அவர்கள் ஹீரோலாவில் நடைபெற்ற நிகழச்சியில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தி அளித்து ஆசீர்வாதம் வழங்கினார்கள். நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் **Bro. Franklin** அவர்கள் துதி பாடல் மற்றும் ஆராதனை மூலமாக பிள்ளைகளை உற்சாகப்படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் தாத்தா ஆடல், பாடலுடன் வந்து பிள்ளைகளுக்கு சாக்லேட் வழங்கி அவர்களை மகிழ்வித்தார். தொடர்ந்து பிள்ளைகள் தங்களது விசேஷித்த பல்வேறு கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். சிறப்பு பாடல்கள், மனப்பாட வசனம், Action Songs, சிறப்பு நடனங்கள், குறுநாடகங்கள் விசேஷமாக கிறிஸ்துவின் பிறப்பை நாடகமாக நடித்து நிகழ்ச்சியினை நிறைவு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் கிறிஸ்துவின் பிறப்பை பற்றிய செய்தியை **“மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி”** என்கிற தலைப்பில் சிறுவர்களுக்கு அளித்தார்கள். அதன் பின் நம்முடைய ஊழியர்களின் பிள்ளைகள் அனைவருக்கும் மற்றும் நாம் தாங்கி வருகிற அனைத்து விசுவாசிகளின் பிள்ளைகளுக்கும் கிறிஸ்மஸ் புத்தாடைகள் பரிசாக வழங்கப்பட்டது. Compassion Project மூலம் தாங்கப்படும் பிள்ளைகளுக்கு புத்தாடைகளுடன் சேர்த்து Christmas Gift வழங்கப்பட்டது. சுமார் 2000 பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வழங்க தேவன் கிருபை செய்தார். பின்பு அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது.

பிள்ளைகள் அனைவரும் இயேசு கிறிஸ்து நமக்காகப் பிறந்தார் என்ற உள்ளான உணர்வோடு மிகுந்த மிகழ்ச்சியோடும் குதூகலத்தோடும் கொண்டாடினார்கள். நிச்சயமாகவே பீல் ஆதிவாசி பிள்ளைகளின் உள்ளத்தில் இயேசு பிறந்திருக்கிறார் என்பதை காண முடிந்தது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# Pr. ரமேஷ் டாமோர் அவர்களுக்கு வரவேற்பு

எனது சொந்த ஊர் தோரணியா. நான் ஊழியத்திற்கு வருவதற்கு முன்பாக பெறும் கஷ்டங்களையும், போராட்டங்களையும் மட்டுமே சந்தித்து வந்தேன். எனது தாயார் இரத்தக்கசிவு நோயால் பெறும் அவதிப்பட்டு வந்தார். எத்தனையோ ஆயிரம் ரூபாய்கள் மருத்துவத்திற்கு செலவு செய்தும் பயனில்லை. அதோடு மட்டும் நில்லாமல் அநேக விக்கிரகங்ளை ஆராதனை செய்தும், அவைகளுக்கு ப–கள் செலுத்தியும் எனது தாயாருக்கு குணமாகவில்லை. இறுதியாக மரண தறுவாயை நெருங்கிவிட்டார்கள். கலக்கமடைந்த இந்த வேளையில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் Pr. மத்தூர் புரியா அவர்கள் மூலம் அறிந்து மன்றாடி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தை எனது தாயாருக்குக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் நாங்கள் முழுக் குடும்பமாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, சபைக்குச் சென்று ஆராதனையில் பங்கு பெற்று வந்தோம். சிறிது காலம் கழித்து தேவன் என்னை ஊழியத்திற்கென்று அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று ஊழியத்திற்கென்று என்னை அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகின்றேன்.

மேலும் 10ம் வகுப்பு வரையே படித்த என்னை தேவன் உயர்த்தி, ஷாலோம் மூலமாக மூன்று ஆண்டுகள் B.Th., படிக்கச் செய்ய கிருபை தந்தார். தற்போது தோரணியா, பாண்டிசேரா ஆகிய இரண்டு கிராமங்களிலும் சபைகள் உருவாகியுள்ளன. தோரணியா கிராமத்தில் ஆலயம் கட்டி முடிக்கும் தறுவாயில் உள்ளது.

**விழாவின் சிறப்பு**

கடந்த 2009 ம் வருடம் நவம்பர் மாதம் Shalom Diocese in India உருவானபோது நானும் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டேன். **"நான் பெற்ற அபிஷேகத்திற்காவும், மகிழ்ச்சிக்காகவும் தேவனுக்கு நன்றி கூறும் வகையில் இந்த வரவேற்பு விழா 20.12.2010 அன்று நடைபெற்றது".** இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக M.L.A. **Mr. வீர்சிங் புரியா** மற்றும் Parliament Member **Mr. பார்சிங் டின்டோர்** ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். மேலும் மத்தியப்பிரதேச ஊழியர்களும், M.P. Shalom Co-ordinator **Pas. Paul Munia** மற்றும் சிறப்பு செய்தியாளராக **Pr. ஜெய்னுசிங் கனவா** ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

M.L.A., Mr. வீர்சிங் புரியா அவர்கள் உரையாடும்போது, எங்களுடைய ஆதரவு இங்கு மட்டுமல்ல அனைத்து கிராமங்களிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் உண்டு. மேலும் எங்களால் இயன்றவரை கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்வோம் என்று வாக்குக் கொடுத்தார். எனக்கு அநேக வேலைகள் இருப்பினும் இந்த விழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததன் காரணம், இது கிறிஸ்து இயேசுவை அடையாளம் காட்டக்கூடிய ஒரு விழாவாகக் காணப்படுகிறது, எப்படியெனில்; இந்த ஊழியர்கள் மூலமாக அநேகர் குடிப்பழக்கத்தி–ருந்தும், கொலை, கொள்ளை, சண்டை போன்ற தீய பழக்கங்களி–ருந்தும் விடுதலை பெற்றுள்ளனர், என்று சாட்சி கூறி வாழ்த்தினார்.

இந்தவிழாவில் 48க்கும் அதிகமான ஊழியர்கள், போதகர்கள் வந்து வாழ்த்தி, ஆசீர்வதித்தனர். மேலும் சுமார் 600க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துகொண்டு ஆடிப்பாடி ஆரவாரத்துடன் தேவனைத் துதித்தனர். அநேக விசுவாசிகள் பணமாகவும், பொருளாகவும் சபைக்குக் காணிக்கைகளைச் செலுத்தினர். வந்திருந்த அனைவருக்கும் மிகவும் சுவையான விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பல இன்னல்களையும், துன்பங்களையும் கடந்து வந்த இப்பகுதியில், தலைவர்கள் மூலமாகவும், அரசியல்வாதிகள் மூலமாகவும் ஆண்டவர் ஒரு திறந்த வாசலை ஏற்படுத்தி வருகிறார். எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.

# போதகர் ரமேஷ் டாமோர் வரவேற்பு நிகழ்ச்சி

தோரண்யா கிராமம்,
மத்தியப்பிரதேசம்





உற்சாகமான நடனத்துடன் தேவனைத் துதித்தல்





உற்சாகமான கலாச்சார வரவேற்பு





ஸ்தோத்திர கூடுகையில் பங்கு பெற்ற
தாந்தலா தாலுகா President, Mr. Parsingh Dindor & M.L.A., Mr. Veersingh Bhuria



போதகர் ரமேஷ் டாமோர் குடும்பம்



ஸ்தோத்திர கூடுகையில்
பங்கு பெற்ற விசுவாசிகள்

## பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சிகள்













## தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்களுக்கான சிறப்பு கூடுகை [03.01.2011]





# COMPASSION PROJECT

## சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சிகள்




ஹிரோலா கிராமம் – குஜராத்.




ஜெரி கிராமம் – குஜராத்.




அந்தர்வேலியா கிராமம் – மத்தியப்பிரதேசம்




## இராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற

# கிறிஸ்மஸ் மேளா



ஊர் தலைவர்களுடன் நமது சுதேச ஊழியர்




செய்தியளிக்கும் சகோ. ஜெயராஜ் அவர்கள்






கூடியிருந்த திரளான ஜனங்கள்





கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த நடனங்கள் & நாடகங்கள்



பங்கேற்ற அனைவருக்கும் சிறப்பு விருந்து

இராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த டிசம்பர் மாதம் 20 ம் தேதி முதல் 24ம் தேதி வரை இராஜஸ்தானில் கிறிஸ்மஸ் மேளா மிகவும் சிறப்பாக நமது பீல் சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் கொண்டாடினார்கள். அநேக புறஜாதியாரும் பங்கு பெற்று தேவனை மகிமைப்படுத்தினார்கள்

# இராஜஸ்தானில் நடைபெற்ற



## கிறிஸ்மஸ் மேளா -2010

டிசம்பர் மாதம் 20ம் தேதி முதல் 24ம் தேதி வரை இராஜஸ்தானில் கிறிஸ்மஸ் மேளா மிகவும் நல்ல முறையில் நடைப்பெற்றது. 20ம் தேதி கதேடியா என்ற கிராமத்தில், நமது ஊழியர் **Rev. தாஜீ கராசியா** அவர்களின் தலைமையில் மேளா நடைப்பெற்றது. இந்த மேளாவில் 1000க்கு மேல் விசுவாசிகள் பங்கு கொண்டனர். இதே மாதிரி தாட்கா என்ற கிராமத்திலும் **Rev. கல்லு டின்டோடு** அவர்களின் தலைமையில் மிகவும் நல்ல முறையில் கிறிஸ்மஸ் மேளா நடைப்பெற்றது. வந்திருந்த விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் பாவத்தி–ருந்து சாபத்தி–ருந்தும், வியாதியி–ருந்தும் விடுதலை கொடுத்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை ஆடிப்பாடி மகிழ்ந்து தேவனை துதித்துக் கொண்டாடினார்கள். மேலும் கோய்கா, கும்புரா, டெப்ரி, காரியாஆகிய கிராமங்களிலும் கிறிஸ்மஸ் மேளா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கோய்க்கா மற்றும் டெப்ரி -யில் நடைபெற்ற மேளாவில் 2500க்கும் மேற்பட்ட ஜனங்கள் பங்கு கொண்டனர். மேலும் இந்த மேளாவில் அரசியல் தலைவர்கள் பங்கு கொண்டார்கள். அவர்களுக்கு நல்ல வரவேற்பும், தேவசெய்தியும் வழங்கப்பட்டது. டெப்ரியில் நடைபெற்ற விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் **Rev. Badar Dodiyar** அவர்கள் உணவு வழங்கி மேளாவை சிறப்பித்தார். **சகோ. ஜெயராஜ்** அவர்கள் அனைத்து மேளாவிலும் பங்கு கொண்டு, கிறிஸ்துவின் பிறப்பு செய்தி அளித்தார்கள்.

இப்படிப்பட்ட மேளாவினால், புதிதாக ஆண்டவரை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் தங்களைப்போல இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட தங்களுடைய இனத்தை சேர்ந்தவர்களைப் பார்த்து மிகவும் சந்தோஷமும் உற்சாகமும் அடைந்தனர்.

மேலும் விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்கள் தங்களது ஊரில் உள்ள இயேசுவை அறியாத ஜனங்களை அழைத்து வந்தனர். இவர்களுக்கும் கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தி வழங்கப்பட்டது. இந்த செய்தியை கேட்டவர்களின் மனதில் தேவன் கிரியைச் செய்யவும், இவர்கள் சபையில் வந்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**
168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் ''V. DEVADASS'' (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission –** என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission –** என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

இந்தியாவில் செல்போன் நம்பரை மாற்றாமல் சேவை நிறுவனத்தை மாற்றிக் கொள்ளும் வசதி 20.01.2011 முதல் அமலுக்கு வருகிறது. இச்சேவையை பதிவு செய்த 7 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ள முடியும். ரூ. 19/– மட்டும் செலுத்தினால் போதும் இச்சேவையை பெற்றுக் கொள்ளலாம் என்று தொலை தொடர்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

---

வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு அத்திவாசிய பொருட்களின் விலை ஏற்றத்தால் ஏற்கனவே மக்கள் தத்தளித்துக் கொண்டுள்ளனர். இந்நிலையில் பெட்ரோல் விலையும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

---

ஜந்தர்மந்தரில் நடந்த போராட்டத்திற்கு பல பா.ஜ. தொண்டர்கள் மாட்டு வண்டி, சைக்கிள் ரிக்ஷாக்களில் வந்திருந்தனர். பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். சிலர் தடுப்புகளை மீறி, நாடாளுமன்றத்தை நோக்கி செல்ல முயன்றனர். அவர்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து போலீசார் கட்டுப்படுத்தினர்.

---

கடந்த 2000 முதல் 2008 வரை இந்தியாவை விட்டு வெளியேறிய கருப்புப் பணத்தின் மதிப்பு ரூ. 4.68 லட்சம் கோடி என சர்வதேச ஆய்வில் தெரியவந்துள்ளது. அமெரிக்க தலைநகர் வாஷிங்டன்னைச் சேர்ந்த சர்வதேச நிதி ஒருங்கிணைப்பு நிறவனம் ஜிஎப்ஐ நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்கும் அதன் சார்பில் கருப்பு பண முதலீடுகள் பற்றி விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

---

ஈராக்கில் 18.01.2011 அன்று நடந்த மனித வெடி குண்டு தாக்குத–ல் போலீசார் உட்பட 50 பேர் ப–யாயினர். 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பாக்தாத்தி–ருந்து 160 கி.மீ. தொலைவில் உள்ள திக்ரித் நகரில் போலீஸ் வேலைக்கான தேர்வு நடந்தது. காலை முதலே நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். காலை 10.15 மணி அளவில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.

---

கடந்த இரண்டு மாதங்களாகவே ஜம்மு & காஷ்மீர், பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடும் குளிர் காணப்படுகிறது. காலை வெகு நேரமாகியும் குளிர் வாட்டுவதால் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்துள்ளது. மக்கள் கம்பளி துணிகளை அணிந்திருந்தாலும், அதற்கு மேல் சால்வை போர்த்திச் செல்கின்றனர். கடைகள், வர்த்தக நிறுவனங்களிலும் வியாபாரம் பாதித்துள்ளது.

நன்றி : www.dinakaran.com

சுதேச ஊழியர் சாட்சி

# Bro. கல்சிங் குண்டியா

குஜராத்

***இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் !***



எனது பெயர் கல்சிங்குண்டியா. நான் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தினைச் சேர்ந்த உண்டார் கிராமத்தினைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. எங்கள் கிராம மக்கள் இறந்த ஆவிகளை வணங்குவதிலும், பூஜைகாரியங்களில் ஈடுபடுவதிலும் வைராக்கியம் கொண்டவர்கள். குடிப்பதும், சாராயம் காய்ச்சுவதும் இவர்களின் தொழில். இயேசுவைப் பற்றி சிறிதும் கூட அறியாதவர்கள். இந்த சூழ்நிலையில் வளர்ந்தவன்தான் நான்.

எனது தாயார் வயிற்றில் இருந்த கட்டியினிமித்தம் அதிகம் கஷ்டப்பட்டார்கள். ரூ. 20,000 செலவு செய்து மருத்துவம் பார்த்தும், 2 ஆடு, 5 கோழி வெட்டி பலிகள் செலுத்தியும் எந்த பலனுமில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்தோம். இந்நிலையில் உண்டார் கிராமத்தில் ஊழியம் செய்து வந்த ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. சாம்ஜி மேய்டா – வைப் பற்றிக் கேள்விப்பட்டு எனது தாயாரை இவரிடம் அழைத்துச் சென்றோம். இவர் எனது தாயாருக்காக பாரத்துடன் ஜெபித்தார். ஜெபத்தைக் கேட்டு தேவன் வியாதியிருந்து பரிபூரண விடுதலை கொடுத்தார்.

இந்த அற்புதத்தின் மூலம் எங்கள் குடும்பம் முழுவதும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது. எனது தாயாரை சுகப்படுத்திய தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற வாஞ்சையில் என்னுடைய வாழ்க்கையை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து. ஷாலோம் ஊழியத்தில் வேதாகமப் பயிற்சி பெற்று தற்போது தன் சொந்த கிராமமான உண்டார் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும் எனது குடும்பத்திற்காகவும் மற்றும் ஊழியங்களுக்காகவும் பாரத்துடன் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus Redeems,** Nalumavadi.



## கிராம ஆலயம்

# ரத்தன்பூரா

## இராஜஸ்தான்

இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் பீல் ஆதிவாசிகள் நிறைந்த கிராமம் ரத்தன்புரா. இந்த கிராம மக்கள் பாவத்திற்கும், அசுத்த ஆவிகளுக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்து வந்தார்கள். இயேசுவைப் பற்றி இவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த மக்களில் ஒருவர்தான் சகோ. காந்திலால் டாமோர்.

இவர் சகல பாவங்களிலும் சிக்குண்டு அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி பல வருடமாக பிசாசின் போராட்டத்தினால் மிகவும் கஷ்டப்பட்டாள். அதிக பணம் செலவு செய்து மந்திரம் செய்தும் விடுதலை இல்லை. 2001ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு சுதேச ஊழியர் சகோ. சுக்லால் டாமோர் அவர்கள் மூலமாக நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்டார். சுதேச ஊழியர் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்தார்.

தொடர்ந்து ஒரு மாதம் ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்த போது, தேவன் அவருடைய மனைவிக்கு பிசாசின் போராட்டத்திருந்து விடுதலை கொடுத்தார். 2002ஆம் வருடம் மார்ச் மாதம் வரை சபையில் விசுவாசியாக இருந்தார். 2003ஆம் ஆண்டு தன்னுடைய வீட்டில் கூட்டம் ஆரம்பித்தார். வருகின்றவர்களுக்கு தன்னுடைய குடும்பத்தில் நடந்த அற்புதங்களைச் கூறி ஆத்தும ஆதாயம் செய்தார். 2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஊழியர் பயிற்சி முகாமில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தற்போது 25 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழிநடத்தி வருகிறார்.

தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுத்தார். அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

Sponsor Name : **Mr.Johnson** - (St. John's Freight Systems) Tuticorin

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

# 2010ல் பணித்தளத்தில் தேவன் செய்த மகத்தான காரியங்கள்

2010–ம் வருடத்தில் தேவன் அருளிய சொல்– முடியாத ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம் **“நீங்கள் என் ஜனம் நான் உங்கள் தேவனாயிருப்பேன்’ (எரேமியா 30: 22)** என்ற வாக்குத்தத்தத்தின்படியே, கடந்த வருடம் முழுவதும் தேவனாயிருந்து நடத்தி வந்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக.

**ஊழியர்கள் கூட்டம்**

ஒவ்வொரு மாதமும் ஊழியர்கள் கூட்டம் 4 இடத்தில் நடைபெற்றது. குஜராத் ஊழியர்களுக்கு Dahod Centre –லும், மத்திய பிரதேச ஊழியர்களுக்கு தனியாக Dahod Centre-லும் மற்றும் ராஜஸ்தான் 1 & 2 பகுதி ஊழியர்களுக்கு ராஜஸ்தானில் கோய்க்காவிலும், மற்றும் ஹேஜாமா–லும் கூட்டங்கள் நடைபெற்றன. எந்தவித எதிர்ப்புகளும் இல்லாதபடி தேவன் காத்துக் கொண்டார். ஊழியர்கள் இந்த கூட்டத்தில் வந்து ஒவ்வொரு மாதமும் புதிய பெலன் பெற்று உற்சாகமாய் ஊழியம் செய்தார்கள்.

Pastor Ordination –பெற்ற 77 ஊழியர்களுக்கும் தங்கள் கிராமத்தில் உள்ள விசுவாசிகள் அவர்களை Pastor ஆக ஏற்று, சிறப்பு வரவேற்பு Programme-களை நடத்தினார்கள். இதில் கிராமத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் பங்கு பெற்றனர். மத்திய பிரதேசத்தில் நடைபெற்ற வரவேற்புகள் படங்களுடன் தினசரி பத்திரிகையில் வெளி வந்தது குறிப்பிடத்தக்கது. இவ்விதமாக, கடந்த ஆண்டு தேவன் நமது ஊழியர்களை சமுதாயத்தில் மற்றவர்கள் மதிக்கத்தக்கதாக உயர்த்தினார். மட்டுமல்லாமல் நமது ஊழியர்களில் B.Th முடித்த 55 பேர்களுக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது என்பது சிறப்பிற்குரியது.

**மூத்த ஊழியர்கள் கூட்டம்**

மூன்று இராஜ்யங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள், Area leaders ஆக நியமிக்கப்பட்டு அவர்களுக்கென்று இராஜ்ய வாரியாக தனித்தனியாக வருடத்தில் 2 முறை கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் Co-ordinators & leaders மிகவும் உற்சாகமாய், கலந்து ஆலோசித்து ஊழியத்தின் காரியங்களைத் திட்டமிட்டு செயல்படுத்தினார்கள்.

**சங்கி–த் தொடர் ஜெபம்**

ஒவ்வொரு ஊழியர் குடும்பமும் (450 குடும்பம்) ஒரு நாளைக்கு ஒரு குடும்பம் என்று Dahod Centre-ல் உபவாசித்து செய்கிற தொடர் உபவாச ஜெபம் 2010–ம் வருடம் முழுவதும் செய்யும்படியாக தேவன் கிருபை செய்தார்.

**ஞாயிறு ஆராதனைகள்**

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்துள்ள அனைத்து சபைகளிலும் வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனை நடைபெறும்படியாய் கிருபை செய்தார். பாஸ்டர் மற்றும் ஊழியர்கள் பொறுப்பாக தங்கள் ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

**ஊழியக்காரிகள் கூட்டம்**

மாதத்தின் முதல் நாள் 1–ம் தேதி முக்கியமான ஊழியக்காரிகள் (சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள்) 100 பேர் இணைந்து உபவாச ஜெபம் செய்யும்படி கிருபை செய்தார். இந்தக் கூட்டத்தில் அந்தந்த மாதத்திற்குரிய அனைத்து Programme–க்காக விசேஷித்த ஜெபம்

ஏறெடுக்கப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் இந்த கூட்டங்கள் நடைபெற்றன. மட்டுமல்லாமல், இந்த leaders மனைவிமார்கள் பொறுப்பாக தங்கள் பகுதிகளில் உள்ள மற்ற ஊழியக்காரிகளுக்கு மாதந்தோறும் கூட்டங்கள் நடத்தினார்கள். மூன்று இராஜ்யத்திலும் சேர்ந்து 30 இடங்களில் இந்த கூட்டங்கள் மாதந்தோறும் நடைபெற்றன.

மட்டுமல்லாமல் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள்அனைத்து சுதேச ஊழியர் மனைவிமார்களுக்கும், அந்தந்த பகுதியில் சென்று விசேஷித்த கூட்டம் மூன்று இராஜ்யங்களிலும் சேர்த்து 12 இடங்களில் நடத்தினார்கள்.

**அந்நிய பாஷை ஜெபம்**

குஜராத், மத்திர பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் 5 இடங்களில் மாதந்தோறும் 1 முறை ஊழியக்காரிகளாக கூடி 3 மணி நேரம் தொடர் அந்நிய பாஷைகளில் ஜெபங்களை ஏறெடுத்தார்கள். இந்த ஜெபங்களில் தேவன் அநேகருக்கு ஒரே விதமான தரிசனங்களையும், மற்றும் ஊழியத்தின் காரியங்களையும் தெளிவாக வெளிப்படுத்தினார்.

**துதி ஆராதனை**

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை முக்கிய ஊழியக்காரிகளாக 50 பேர் கூடி தாகோத் Training Centre-ல் வைத்து 5 மணி நேரம் தொடர் துதி ஆராதனை நடைபெற்றது. இந்த ஆராதனையில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, அபிஷேகத்தினால் அனைவரும் நிரம்பி மென்மேலும் ஆவியிலே பெலப்பட்டார்கள். சிலருக்கு ஆராதனை வேளையில் அற்புதம் நடைபெற்றது. கர்த்தருடைய மகிமையை அனைவரும் கண்டார்கள். பரலோகமே இறங்கி வந்த அனுபவத்தை அனைவரும் உணர்ந்தார்கள்.

**முழு இரவு ஜெபம்**

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சுமார் 25 ஊழியக்காரிகள் இணைந்து தாகோத் அலுவலகத்தில் வைத்து முழு இரவு ஜெபம் செய்தார்கள். இதில் விசேஷமாக 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

**பெண்கள் உபவாச ஜெபம்**

450 சுதேச ஊழியர்களின் மனைவிமார்களும், அவர்கள் முறையே 7, 7 நாட்கள் உபவாச ஜெபம் செய்து, 2010–ல் வருடத்தின் 365 நாட்களும் பீல் மக்களின் இரட்சிப்பிற்கென்று உபவாசித்து ஜெபித்தார்கள். அதுமட்டுமல்லாமல், 1 நாள், 3 நாள், 21 நாள், 40 நாள் என்று உபவாச ஜெபம் செய்யும்படியாக தங்கள் பெயர்களை இணைத்துக் கொண்டு உபவாசித்து ஜெபித்தார்கள்.

**பெண்கள் வேத பாட பரீட்சை**

கடந்த ஆண்டில் புதிய ஏற்பாட்டில் உள்ள இயேசு கிறிஸ்துவினுடைய அனைத்து உபதேசங்களையும் மனப்பாடமாக படித்து ஒப்பித்தார்கள். இதில் படித்த மற்றும் படிக்காத ஊழியக்காரிகள் மிகவும் உற்சாகமாக மனப்பாடம் செய்து ஒப்பித்து சுமார் 100 பேருக்கு மேலாக பரிசுகளைப் பெற்றார்கள். இவர்களுக்கு சகோ.மோகன் சி. லாசரஸ் அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.

**பெண்கள் ஊழியம்:**

2 பேர் கொண்ட 25 குழுக்கள் சேர்ந்து ஷாலோம் ஊழியத்திலுள்ள அனைத்து சபைகளிலும் விசேஷ பெண்கள் கூட்டங்களை நடத்தினார்கள். இதில் தேவன் மகத்தான காரியங்களை

ஊழியக்காரிகள் மூலம் செய்தார். சபைகளில் பெண்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், ஜெப ஆவியையும், ஆத்ம பாரத்தையும் பெற்றார்கள்.

**மூப்பர்கள் கூடுகை :**

3 மாநிலங்களிலும் பகுதி வாரியாக 12 இடங்களில் மூப்பர்களுக்கென்று விசேஷித்த கூட்டங்கள் நடைபெற்றன. கடந்த ஆண்டு 2 முறை நடைபெற்ற இக்கூடுகையின் மூலம் சபை மூப்பர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், சபையைக் குறித்த பொறுப்புகளையும் அறிந்து ஊழியர்களோடு இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

**மூப்பர்களின் மனைவிமார் கூட்டம் :**

குஜராத்தில் சுமார் 5 இடங்களில் மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று விசேஷித்த கூட்டம் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள். இக்கூட்டங்களில் சுமார் 700 பெண்கள் கலந்து கொண்டார்கள்.

**சிறுவர் முகாம்கள் :**

கடந்த ஆண்டில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநில சபைகளிலும் 6 வயது முதல் 12 வயது வரை உள்ள சிறுவர்களுக்கென்று விசேஷித் முகாம்கள் நடத்தப்பட்டன. ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என்று தனித்தனியாக 15 முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 2500 பிள்ளைகள் ஆசீர்வாதம் பெற்றனர். இந்த முகாம்களில Action Song, Group Discussion மனப்பாட வசனம், Quiz Programme, Puppet Show மற்றும் வேதாகமத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து விசேஷித்த தேவ செய்தி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களால் வழங்கப்பட்டது. பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்படியாக பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்ட இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இதே போன்று I.P.M -(Guj), Jesawada-(Guj), Gadwada(MP), Bijalpur(Raj), Goika (Raj) ஆகிய Hostel மாணவர்களுக்கும் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. இதில் மாணவ மாணவியர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர்.

இதே போன்று Hirola(Guj), Jeri(Guj), Anthervelia (MP) ஆகிய 3 இடங்களில் Compassion சிறுவர்களுக்கென்று தனித்தனியே ஒரு நாள் முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமின் மூலமாக சிறுவர்கள் மத்தியில் உற்சாகமான ஆவியையும், எழுப்புதலையும் தேவன் கட்டளையிட்டார். சிறுவர்கள் மூலமாக அநேக பெற்றோர்கள் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தப்பட்டார்கள்.

**வா–பர்கள் முகாம்**

குஜராத் மற்றும் ராஜஸ்தானில் உள்ள அனைத்து சபைகளில் உள்ள 13 வயதிற்கு மேற்பட்ட வா–பர்களுக்கு சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. வா–ப பையன்மார்களுக்கு தனியாகவும், வா–ப பெண்களுக்கு தனியாகவும் 6 இடங்களில் நடைபெற்றது. வா–பர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், வேதாகமத்தின் முக்கியத்துவத்தையும் அறிந்து ஆவியில் பெலன் அடைந்தார்கள்.

**மாணவர்களுக்கென்று சிறப்பு ஜெபம்**

மூன்று மாநிலத்திலுமிருந்து 10, 12வது படிக்கும் மாணவிகளுக்கென்று சிறப்புப் பிரார்த்தனை கூட்டம் Dahod Centre-ல் நடைபெற்றது. இதில் சுமார் 400 பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். பங்குபெற்ற யாவரும் நல்ல மார்க் பெற்று பாஸ் பண்ணினார்கள். குறிப்பாக 70% –க்கு மேலாக அநேக மாணவ, மாணவியர்கள் மார்க் எடுத்தார்கள். தற்போது இவர்கள் Teacher Training,

Nurse Training, I.T.I ,Polytechnic, Computer Course படித்து வருகிறார்கள். கர்த்தர் இந்த இளம் தலைமுறையை அதிகமாய் ஆசீர்வதித்து வருகிறார்.

**பெற்றோர் கூடுகை**

மூன்று மாநிலத்திலும் உள்ள Hostel children பெற்றோர்களுக்கும், Compassion Children பெற்றோர்களுக்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பெற்றோர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்தவர்களாய், பிள்ளைகளை குறித்த கரிசனையோடு ஒத்துழைத்தார்கள்.

**C.B.C. பயிற்சிகள்**

கோடை விடுமுறையில் C.B.C. (Children Bible Class) 10 நாட்கள் நடைபெற்றது. அதற்கான Book Materials எல்லாம் ஷாலோம் Training unit ஊழியர்களே இணைந்து தயார் செய்தார்கள். 2010–ல் “நல்ல போதகர் இயேசு” என்ற தலைப்பில் தயார் செய்யப்பட்டு, பாடல்களும் புதிய ராகங்களுடன் இயற்றப்பட்டு பாடப்பட்டன. இதற்கான பயிற்சி 2 நாட்கள் முறையே 7 Programme சுமார் 14 நாட்கள் நடத்தப்பட்டது. இதில் சபை ஊழியர் மற்றும், ஊழியக்காரிகள் Sunday Class teachers-களும் பங்குபெற்று பயிற்சி பெற்றார்கள்.

**C.B.C வகுப்புகள்**

2010-ல் மே மாதம் அனைத்து சபைகளிலும் 10 நாட்கள் சிறுவர்களுக்கென்று C.B.C Programme நடத்தப்பட்டது. சுமார் 20,000 பிள்ளைகள் இந்த Programme மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இயேசுவண்டை வழி நடத்தப் பட்டார்கள்.

**ஞாயிறு வகுப்புகள்**

கடந்த ஆண்டு ஷாலோம் ஊழியத்தில் தேவன் தந்துள்ள சபைகளில் ஒழுங்காக, உற்சாகமாக Sunday Class நடத்தப்பட்டது. அதன் பலனாக, பிள்ளைகள் வேத அறிவில் வளர்ந்து வருகிறார்கள்.

**புதிய ஊழியர்கள் பயிற்சி**

கடந்த ஆண்டில் 25 புதிய ஊழியர்களும் 1 மாத வேதாகமப் பயிற்சி அளிக்கப்பட்டது.இந்த பயிற்சியின் போது, ஊழியர்கள் இரட்சிப்பின் அனுபவத்தையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், ஆவி ஆத்துமா சரீரத்தில் விடுதலையையும் பெற்று, நல்ல வேத அறிவும் பெற்று தங்கள் பணித்தளங்களுக்கு திரும்பினார்கள். தங்கள் கிராமங்களில் புதிய கூட்டங்களை, ஆராதனை குழுக்களை உருவாக்கியுள்ளார்கள்.

**ஷாலோம் அற்புதத்தின் நாள்**

ஒவ்வொரு வருடம் செப்டம்பர் மாதத்தில் ஷாலோம் அற்புதத்தின் நாள் என்று அனைத்து சபைகளிலும் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டிலும் நடைபெற்றது. அதில் ஒரே நாளில் 4300 அற்புதங்களை தேவன் பணித்தளத்தில் செய்துள்ளார். சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒரே நாளில் ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு *(SHALOM MISSION SUNDAY)***

ஜுலை1ம் தேதி ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட நாள் அந்த நாளில் அனைத்து சபைகளிலும் விசேஷித்த thanks giving service நடைபெற்றது. மட்டுமல்லாமல், அக்டோபர் மாதத்தில் Mission Sunday கொண்டாடப்பட்டது. இதில் சபைமக்கள் விசேஷ கவர் காணிக்கைகளை உற்சாகமாய் படைத்தார்கள். எல்லா சபைகளிலும் மக்கள் கொடுத்த காணிக்கை 11 இலட்சம் ஆகும். தேவனுக்கே மகிமை!

**ஈஸ்டர் பண்டிகை**

விசுவாசிகள் மிகவும் உற்சாகமாய் 40 நாட்கள் உபவாச ஜெபம் செய்து Easter பண்டிகைக்கு ஆயத்தமானார்கள். திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் எல்லா சபைகளிலும் பரிசுத்த நற்கருணை ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து அனைத்து சபைகளிலும் புனித வெள்ளி அன்று Good Friday Service நடைபெற்றது. மட்டுமல்லாமல், அந்த சனிக்கிழமை சபைகளில் ஞானஸ்நானஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து ஈஸ்டர் பண்டிகையை எல்லா சபைகளிலும் சிறப்பாய் கொண்டாடினார்கள்.

**மருத்துவ முகாம்**

ஒவ்வொரு வருடமும் Dr. Abel, Dr.Jolly Abel, Dr. Inbakumar(Rusha) அவர்கள் பணித்தளத்திற்கு வந்து மருத்துவ முகாம் நடத்தி தருகிறார்கள். கடந்த வருடமும் பணித்தளம் வந்து குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தானில் 7 இடங்களில் நடத்தினார்கள். இந்த மருத்துவமுகாம் மூலம் மக்கள் சுகம் பெற்று ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.

**சுகாதார பயிற்சி முகாம்கள்**

நம்முடைய சுதேச ஊழியர்களுக்கு Medical Health Training நடத்தி வருகிறோம். இந்த Training-ம் Dr. Jolly Abel அவர்கள் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. இது வரை சுமார் 350 ஊழியர்களுக்கும், ஊழியக்காரிகளுக்கும் நடத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலும் புதிதாக 70 சுதேச ஊழியர்களுக்கு இந்த பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

**ஷாரோன் நினைவு மருத்துவமனை**

குஜராத்தில் ஜாலோத் பணித்தளத்தில் தேவன் நமக்கு கொடுத்துள்ள பங்களாவில் கடந்த ஆண்டு Sharon Memorial Hospital ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. Dr. Shiju அவர்கள் அர்ப்பணிப்போடு வந்து சேவையை செய்து வருகிறார்கள். தேவன் அவர்களை பயன்படுத்தி வருகிறார்கள்.

**ஒ – நாடா**

கடந்த ஆண்டு பீ–, பிலோடி, வாகுடி பாஷையில் பாடல்கள் கேசட்களும், C.D-க்களும் வெளியிடும்படியாய் தேவன் கிருபை செய்தார். Gujarat Bible Society –ன் Sponsorship மூலமாக இந்த ஒ– நாடா வெளியிடப்பட்டது. மட்டுமல்லாமல், C.B.C. (Children Bible Class) சிறுபிள்ளைகளுக்கென்று பாடல் ஒ–நாடா மற்றும் C.D-க்களும் ஷாலோம் மூலமாக வெளியிடப்பட்டது.

**COMPASSION PROJECT :**

2010–ம் வருடம் முழுவதும் நமது Compassion Project ஹிரோலா(Guj)விலும், ஜெரி(Guj) யிலும் மற்றும் அந்தர்வே–யா (MP)விலும் எந்தவித பிரச்சினையும் எதிர்ப்புகள் இல்லாமல் நடைபெற தேவன் கிருபை செய்தார். மட்டுமல்லாமல், இந்த பிள்ளைகளுக்கு வாரந்தோறும் Sunday Class நடத்தும்படியாகவும்,Camps நடத்தும்படியாகவும் தேவன் கிருபை செய்தார். மேலும் excursion –ஆக Ahmedabad –க்கு பிள்ளைகள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். மிருகக் காட்சி சாலை மற்றும் boating இதையெல்லாம் காட்டி பிள்ளைகள் உற்சாகப்படுத்தப்பட்டார்கள். மற்றும் மாதந்தோறும் 30–ம் தேதி Compassion ஊழியர்களுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**ஆலய பிரதிஷ்டை**

கடந்த ஆண்டில் 6 சிறிய ஆலயங்களும், மற்றும் 5 இடங்களில் பெரிய ஆலயங்களும் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன.

**இந்திய வேதாம சங்கம் மூலம் விருது**

ஷாலோம் ஊழியத்தில் கடந்த ஆண்டு குஜராத்தில் அதிகமாய் வாங்கியுள்ளபடியால் Bible Society யி–ருந்து Bible distribution award கொடுக்கப்பட்டது.

**பணித்தளத்தை பார்வையிட வந்தவர்கள்**

தமிழ் நாட்டி–ருந்து பணித்தளத்திற்கு அநேகர் வருகை தந்தார்கள். அவர்களுக்கென்று சிறப்பு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்து சபைகளை சந்திக்கவும், அவர்கள் மூலமாக ஆலயங்களை பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை செய்தார். மேலும் பள்ளி மற்றும் ஹாஸ்ட–ல் தங்கிப் படிக்கும் சிறுவர்களையும் சந்தித்துச் சென்றார்கள்.

**தொலைபேசி ஊழியம்**

சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுடைய போன் நம்பர் ஷாலோம் காலண்டரில் அச்சடிக்கபட்டிருந்தது. அனைத்து சபை மக்களும் தங்கள் வீடுகளில் ஷாலோம் காலண்டரை வாங்கி தொங்க விட்டிருந்தார்கள். ஆகையால், விசுவாசிகள் தங்கள் ஜெப உதவிக்காக எப்பொழுதும் இரவும், பகலும் போன் செய்து அற்புத சுகம் மற்றும் விடுதலையையும், சமாதானத்தையும் ஆறுதலையும் தைரியத்தையும் பெற்றார்கள். இந்த ஊழியத்தை ஆசீர்வதித்த தேவனுக்கே மகிமை!

**சுதேச ஊழியர் குடும்ப முகாம்**

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் Shalom family Conference நடைபெறும். 2010–ம் வருடத்திலும் Anand (Gujarat) நகரத்தில் உள்ள Christian centre-ல் Shalom family Conference நடைபெற்றது. **சகோ. மோகன் சி.லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் சிறப்புச் செய்தி அளித்தார்கள். மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களும் வந்திருந்தார்கள். மட்டுமல்லாமல், கோவையி–ருந்து **பாஸ்டர் டேவிட் பிரகாசம்** அவர்கள் வந்து செய்தியளித்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. ஊழியர்கள் புதிய அபிஷேகத்தையும், புதிய தரிசனத்தையும் பெற்றார்கள். குறிப்பாக ஒரே மாதிரி தரிசனத்தை நிறைய ஊழியர்கள் தரிசித்தார்கள். ஒவ்வொரு ஊழியருக்கு 10,000 ஆத்துமாக்களையும், ஷாலோம் ஊழியத்திற்கு 10 இலட்சம் ஆத்துமாக்களையும் தருவதாக அநேகர் தரிசனம் கண்டார்கள். தேவன் சிலரை கரம் பிடித்து அழைத்து வருகிறார் என்று சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் கூறும் பொழுது, அநேக ஊழியர்களும், ஊழியக்காரிகளும் முன் பகுதிக்கு ஒடி வந்து, விசேஷ அபிஷேகத்தையும் தரிசனத்தையும் பெற்றார்கள். இதில் சுமார் 900 பேர் கலந்து கொண்டார்கள். இயேசு விடுவிக்கிறார் மூலம் ஊழியர்களுக்கும், ஊழியக்காரிகளுக்கும் பரிசாக bags கொடுக்கப்பட்டது.

**சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் பணித்தள வருகை**

கடந்த நவம்பர் 2010–ல் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் நமது ஷாலோம் பணித்தளத்திற்கு வருகை தந்தார்கள். பாரேவா(குஜராத்)வில் ஆலயம் பிரதிஷ்டை செய்தார்கள். கங்கேலா(குஜராத்)விலும் அந்தர்வே–யா (மத்தியபிரதேசம்)விலும் நடைபெற்ற விசேஷித்த ஆராதனையில் சிறப்பு செய்தி அளித்தார்கள். மட்டுமல்லாமல், நமது பணித்தளங்களை வந்து பார்வையிட்டு சிறப்பு ஜெபம் செய்தார்கள். மற்றும் ஊழியக்காரர்களின் பிள்ளைகளுக்கென்று

சிறப்பு Programme நடத்தப்பட்டது. அதில் சுமார் 500 பிள்ளைகள் கலந்து கொண்டார்கள். அவர்களின் கலை நிகழ்ச்சியில் பங்குபெற்று சிறப்பு செய்தி அளித்தார்கள். மற்றும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்கு பிள்ளைகள் கையெழுத்திட்ட வாழ்த்து அட்டை அளித்தார்கள். பிள்ளைகளுக்கு பிரியாணி மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இரவு 12 மணி வரைக்கும் பிள்ளைகள் மிகவும் உற்சாகமாய் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

**XYLO வாகனம்**

நம்மிடமிருந்த Bolero Jeep பழமையான காரணத்தினால் வேறு புதிய Jeep வாங்க நினைத்தோம். அந்த காரியத்தை தேவன் வாய்க்க செய்தார். **Bro. Mohan C. Lazarus** (இயேசு விடுவிக்கிறார்) மூலமாக நமது ஷாலோம் ஊழியத்திற்கு Xylo வாகனம் கிடைக்கக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

**தமிழ் ஆராதனை**

பணித்தளத்தில் தேவன் புதிய தமிழ் மிஷனெரி குடும்பங்களை நமக்கு கொடுத்து, Church net work projects மற்றும் Office காரியங்களை கவனிக்கும்படியாய் இவர்கள் ஊழியம் செய்து வருகிறார்கள். 2010–ம் வருடம் முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 7.30 மணியி–ருந்து 9.00 மணி வரை தமிழ் பாஷையில் பாடல்கள் பாடி தேவனை ஆராதிக்கும்படியாய் தேவன் கிருபை செய்தார். மட்டுமல்லாமல், கிறிஸ்மஸ் கீத ஆராதனையும் தமிழ்மொழியில் பாடி கொண்டாட கிருபை செய்தார்.

**கிறிஸ்மஸ் சிறுவர் நிகழ்ச்சிகள்**

2010–ம் வருடம் டிசம்பர் மாதத்தில் விசேஷித்த கிறிஸ்மஸ் நிகழ்ச்சி சிறுபிள்ளைகளுக்கு நடத்தப்பட்டது. குஜராத் மற்றும் மத்திய பிரதேச ஊழியக்காரர்களுடைய பிள்ளைகளுக்கும் மற்றும் குஜராத் hostel I.P.M ,Jesawada மற்றும் நாம் தாங்கி வருகிற விசுவாசி பிள்ளைகளுக்கும் Dahod Centre-ல் வைத்து கிறிஸ்மஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. X’mas father dance மற்றும் நாடகம், பாடல்கள், நடனம் என்று பலவகையான நிகழ்ச்சிகள் நடத்தி சிறப்பாக கொண்டாடப்பட்டது. மட்டுமல்லாமல், இதை போலவே ராஜஸ்தான் ஊழியர்களின் பிள்ளைகளுக்கும், பிஜல்பூர் Hostel மற்றும் School பிள்ளைகளுக்கும் Goika hostel பிள்ளைகளுக்கும் Bijalpur Schoool மைதானத்தில் பந்தல் போட்டு மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. மட்டுமல்லாமல், Compassion Children X’mas Programme ஹிரோலாவிலும், ஜெரியிலும், மற்றும் அந்தர்வே–யாவிலும் தனித்தனியாய் நடைபெற்றது.

அனைத்து சிறுவர்களுக்கும் சுமார் 2000 சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. அந்த நாளில் விசேஷமாய் அன்பின் விருந்து கொடுக்கப்பட்டது. மிகுந்த உற்சாகமாய் பிள்ளைகள் கொண்டாடினார்கள்.

**கிறிஸ்மஸ் கீத பவனி**

அனைத்து சபையினரும் மிகவும் உற்சாகமாய் கிராமங்களில் வீடு வீடாக சென்று பாடல்களை பாடி நடனம் ஆடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்களையும் சந்தித்து கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவித்தார்கள்.

**கிறிஸ்மஸ் மேளா**

இராஜஸ்தானியல் 5 இடங்களில் விசுவாசிகள் கூடி பாடல் பாடி, நடனம் ஆடி **“கிறிஸ்மஸ் மேளா”**–வை கொண்டாடினார்கள். இதில் முக்கியமான கிராமத் தலைவர்களும், அதிகாரிகளும் பங்கு பெற்றார்கள். இந்த மேளாவில் கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை குறித்து பிரசங்கிக்கப்பட்டது. மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. தேவனுக்கே மகிமை!

**கிறிஸ்மஸ் ஆராதனை**

அனைத்து ஷாலோம் சபைகளிலும் மிகவும் சிறப்பாக இந்த ஆண்டு கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது. தேவன் கிருபையால் எந்தவித எதிர்ப்புகளும் இல்லாமல் காத்துக் கொண்டார். மிகுந்த உற்சாகமாய், சாப்பாடு மற்றும் இனிப்புகளை வழங்கி, கிறிஸ்மஸ் தாத்தா ஆடல், பாடல் மற்றும் சிறுவர் Programme நடத்தியும், மற்றும் விசுவாசிகள் நடனத்தோடும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

கிறிஸ்மஸ் அன்று பிஷப். தேவதாஸ் அவர்கள் குஜராத் கங்கேலா சபையிலும், அந்தர்வே–யா சபை(மத்திய பிரதேசம்)யிலும் பங்குபெற்று சிறப்பு கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார்கள். கும்பூரா சபை (இராஜஸ்தானில்)யில் கிறிஸ்மஸ் ஆராதனையில் M.L.A வந்து பங்கு பெற்றார். இதேபோல், அநேக சபைகளில் முக்கியமான அதிகாரிகளும், ஊர் தலைவர்களும் பங்கு பெற்றார்கள்.

**தமிழகத்தில் நடைபெற்ற ஊழியங்கள் :**

07.03.2010 அன்று சென்னையில் ஷாலோம் பங்காளர் கூடுகை நடைபெற்றது. இதில் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

21.03.2010 அன்று மார்த்தாண்டத்தில் சிங்களேர் நினைவு மண்டபத்தில் வைத்து ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை நடத்தப்பட்டது.

மார்ச் – 2010 16,17&18 ஆகிய தேதிகளில் கொடுப்பைக்குழி கிராமத்தில் CSI ஆலயத்தில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பாக நற்செய்திக் கூட்டங்கள் நடைபெற்றன.

2010 ஆகஸ்ட் மாதம் 13,14&15 ஆகிய தேதிகளில் சத்தியமங்கலத்தில் எழுப்புதல் பெருவிழா நடத்த கர்த்தர் கிருபை செய்தார். திரளான ஜனங்கள் இதில் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றனர். இதில் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களையும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

15.08.2010 அன்று சத்தியமங்கலத்திலுள்ள ஜீவ வார்த்தை A.G. சபையில் வைத்து நமது சுதேச ஊழியர்கள் சகோ. பரத்பாய் சாரேல் & சகோ. நவல்புரிய ஆகியோர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.

02.10.2010 அன்று தூத்துக்குடி பவர் IPC சபையில் நடைபெற்ற பெண்கள் முகாமில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

10.10.2010 அன்று மதுரை சகல பரிசுத்தவான்களின் ஆலய ஞாயிறு ஆராதனையில் வைத்து நமது சுதேச ஊழியர் சகோ. சோமா L. புரியா அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

அக்டோபர் – 2010 9&10 ஆகிய தேதிகளில் ஆறுமுகநேரியில் மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்கள் மூலமாக நடைபெற்ற இரண்டாம் ஆண்டு ஆரம்பக் கூடுகைகளில் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களையும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.

**தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியங்கள் :**

தினமும் காலை 9.30க்கு ஜெபம், வெள்ளி தோறும் உபவாச ஜெபம், ஆதரவாளர்களின் இல்லங்களில் ஜெபக்குழுக்கள் மூலமாக நடைபெறும் ஜெபம், Finance, Promotional Work, Thanks Letter, Report, Communication, Magazine, Shalom Charity Mission, மற்றும் e-mail & Internet போன்ற ஊழியங்களை நடத்த தேவன் கிருபை செய்தார்.

சென்னையிலும் மார்த்தாண்டத்திலும் ஷாலோம் கிளை அலுவலகங்கள் மூலமாக முன்னேற்றப்பணி ஊழியங்களை நிறைவேற்ற தேவன் கிருபை புரிந்தார்.

மேலும் மார்த்தாண்டத்தில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமைகளில் ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை நடைபெற்று வருகிறது.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

# SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## ஷாலோம் ஊழிய ஆயுள் கால அங்கத்தினராக அழைப்பு

பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவன் தந்த தரிசனத்தோடு **"அன்பு பகிர்வு இயக்கம்"** *(Sharing Love Mission)* மூலமாக கடந்த 20 ஆண்டுகளில் 500 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும், 600க்கும் அதிகமான சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் கிருபை தந்தபடியால் அவரை துதிப்போமாக. மேலும் சபை ஊழியம் மட்டுமின்றி, கல்வி, சுகாதாரம், மற்றும் மேம்பாட்டு திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறோம். இத்திட்டங்களை நிறைவேற்ற ஜெபித்து, ஆவியானவரின் நடத்துதலின்படி, ஒரு நபர் ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி **"ஷாலோம் ஊழிய ஆயுள் கால அங்கத்தினர்"** – ஆக இணைக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். முதற்கட்டமாக குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

இந்த திட்டத்தில் உங்களையும், உங்கள் குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் நண்பர் உறவினர்களையும் அறிமுகப்படுத்தி இணைக்க மிக அன்புடன் கேட்கிறோம். ஷாலோம் ஆயுள் கால அங்கத்தினர்களுக்காக நாங்கள் அனுதினமும் ஜெபிப்பது மட்டுமின்றி பிறந்த நாள் மற்றும் திருமண நாட்களை நினைவுகூர்ந்து ஜெபிப்போம். எங்கள் ஊழிய பாரத்தை சுமக்கும் பங்காளர்களின் பாரத்தை நாங்கள் எங்கள் ஜெபத்தில் வைத்துத் தாங்க ஆயத்தமாக உள்ளோம்.

இது குறித்து எங்கள் முன்னேற்ற பணியாளர்கள், பிரதிநிதிகள் வரும்போது உற்சாகத்துடன் செயல்பட அன்பாய் கேட்கிறோம். ரூ.1000/– பெற்றுக் கொண்ட பின்பு தலைமை அலுவலகத்திலிருந்து நன்றி கடிதம் மற்றும் ஊழிய காரியத்தை குறித்த C.D. மற்றும் "ஆயுள்கால அங்கத்தினர் சான்றிதழ்" (Shalom Life Membership Certificate) ஆகியவை அனுப்பி வைக்கப்படும். மாதந்தோறும் நமது அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் பத்திரிகை மற்றும் வருடம் ஒருமுறை ஷாலோம் ஊழிய அறிக்கை அனுப்பி வைக்கப்படும். இன்றே இணைந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலும் உங்கள் காணிக்கையை **Sharing Love Mission** – என்ற பெயருக்கு **D.D. or Cheque or M.O.** அல்லது **Net Transfer** மூலமாக அனுப்பலாம்.



ஆயுட்கால அங்கத்தினர் சான்றிதழ்


"இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்." ஏசா. 43:19

## ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

தூத்துக்குடியில்

# ஷாலோம்

# மிஷனெரி தரிசன கூடுகை



நாள்

**30–ஜனவரி,2011**
**ஞாயிறு**

நேரம்

**மாலை 5.30 மணிக்கு**



இடம்

**ரூபவதி பேலஸ்,**

மில்லர்புரம் வாட்டர் டேங்க் அருகில், தூத்துக்குடி – 8.

மிஷனெரி செய்தி **Rt.Rev.Dr. V. தேவதாஸ்**

பணித்தளச் செய்தி **சகோதரி D. வஹிதா தேவதாஸ்**

சபை பாகுபாடின்றி அனைவரும் குடும்பமாய் பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்!

உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அறிமுகம் செய்து அழைத்து வாருங்கள்!